# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,**
**தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590**

ஆணை நாள் 17.11.2020

**முன்னிலை**

**முனைவர் ரா.பிரதாப்குமார்**

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 3743/B/19**

திரு.மூ.ராசு — மேல்முறையீட்டாளர்

எதிர்

பொதுத் தகவல் அலுவலர்/
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
ஆத்தூர்,
திண்டுக்கல் மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

**ஆணை**

COVID-19 காரணமாக தமிழ்நாடு அரசால், ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை மேற்கொள்ள இயலாததால், இன்று (17.11.2020) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மனுதாரர் திரு.மூ.ராசு மற்றும் பொதுத் தகவல் அலுவலர், திருமதி.சீதாலட்சுமி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர், ஆத்தூர், திண்டுக்கல் மாவட்டம் அவர்கள் பங்கேற்றார்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 16.02.2019 தேதியிட்ட மனுவில், திரு.M.நாகமுத்து என்பவர் பணியில் சேர்ந்த நாள், ஓய்வு பெற்ற நாள் உள்ளிட்ட 10 இனங்களில் தகவல்களைக் கோரி, பொதுத் தகவல் அலுவலர், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், ஆத்தூர் அவர்களுக்கு மனு செய்துள்ளார்.

3. 11.03.2019 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக கிடைக்கப்பெற்ற தகவல் திருப்தியளிக்காததால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் 19.03.2019 தேதியிட்டு முதல் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலர் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார். முதல் மேல்முறையீட்டு அலுவலரின் 26.03.2019 தேதியிட்ட தகவல் முழுமையான தகவல் அல்ல எனக்கூறி, மனுதாரர் 22.04.2019 தேதியிட்டு இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டின் அடிப்படையில் தொலைபேசியின் வாயிலாக விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையின் போது பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்கும் பொருட்டு 2 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டு, மனுதாரர் சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் கோரிய தகவல்களை வழங்க ஆணையிடப்பட்டது.

5. மேற்படி ஆணைக்கிணங்க, பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். மேற்படி தகவல்களை மனுதாரர் பெற்றுக்கொண்டதை உறுதிசெய்யும் பொருட்டு 17.11.2020 தேதியிட்டு தொலைபேசியில் தொடர்புகொண்டபோது தகவல்களை பெற்றுக்கொண்டதாக தெரிவித்ததன் அடிப்படையில் இவ்வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஒம்/-(ரா.பிரதாப்குமார்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 3743/B/19**
**பெறுநர்**
பொதுத் தகவல் அலுவலர்/
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
ஆத்தூர்,
திண்டுக்கல் மாவட்டம்.

திரு.மூ.ராசு,
5/204, பத்திரப்பதிவுத்துறை சாலை,
ஆத்தூர்,
திண்டுக்கல் மாவட்டம் - 624 701.

Copy to: File
MP/PA-19.11.20